
# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 20.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# கிழக்கு மாகாணத்தில் 3 ஆவது அலையில் 64 பேர் மரணம்; 6,612 பேருக்கு தொற்று

## சாதாரண அறிகுறிகள் ஏற்பட்டாலும் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்; கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்



(பைஷல் இஸ்மாயில்)

சாதாரண நோய் அறிகுறிகள் ஏற்பட்டாலும் அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும்,

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் தீவிரமடையும் கொரோனா
# ஒரே நாளில் 91 தோற்றாளர்கள் இனங்காணல்
## 44 சிறைக்கைதிகளுக்கும் தொற்று உறுதி

(படுவான்பாலகன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை 91பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

இதில் மட்டக்களப்பு சிறைச்சாலை கைதிகள் 44 பேரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டு சிறைச்சாலையில் 67 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 44 பேருக்கு

02 ஆம் பக்கத்தில்...

## 14 சுகாதார பிரிவுகள் சிவப்பு வலயங்களாக அறிவிப்பு



## மட்டக்களப்பில் 5 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில்



(ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயல பிரிவுக்குட்பட்ட 5 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை நேற்று முதல் முழுமையாக முடக்குவதற்கான தீர்மானத்தை

02 ஆம் பக்கத்தில்...

## கோவிட் தோற்றாளர்களுக்கான இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் மன்னாரில் ஆரம்பம்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்களை கவனிப்பதற்கு மன்னாரில்; இடைத்தங்கள் சிகிச்சை நிலையம் ஒன்று நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தால்

02 ஆம் பக்கத்தில்...

## வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் மருதநகர் கிராமம் முடக்கம்



(ந.குகதர்சன்)

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் கல்மடு கிராம அதிகாரி பிரிவிலுள்ள மருதநகர் கிராமம் நேற்று புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பிரதேச செயலாளர்

02 ஆம் பக்கத்தில்...






## மரப்பாலம் விபத்தில் குடும்பஸ்தர் பலி

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு மரப்பாலம் பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 22 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

செவ்வாய் இரவு 11.15 மணியளவில் இச்சம்பவம்


02 ஆம் பக்கத்தில்...



## துறைமுக நகரத்திட்டம் குறித்த சட்டமூலம்
# தமிழ், முஸ்லிம் மக்களிடம் சாணக்கியன் விடுத்துள்ள அவசர கோரிக்கை

துறைமுக நகரத்திட்டம் குறித்த சட்டமூலத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு உங்களின் வாக்குகளினால் தெரிவான நாடாளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...











## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இணையவழி கூட்டு நினைவேந்தல்

12ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை கொவிட்19 பேரழிவு வைரஸ் பரவல் காரணமாக அனைத்து தமிழ் மக்களும் ஒன்றாகத் திரண்டு நினைவேந்த முடியாத நிலையில் வீடுகளில் இருந்து நினைவேந்துமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரியிருந்தது.

அதன் பிரகாரம் வீடுகளில் இருந்து தமிழின

02 ஆம் பக்கத்தில்...









## பல்கலைகழ அனுமதி விண்ணப்பம்
# முக்கிய அறிவிப்பு

2020/2021 கல்வியாண்டுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பம்

02 ஆம் பக்கத்தில்...

## அகவணக்கம் செலுத்திய துரைராசசிங்கம்



இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் பெருநிலப் பரப்பில் உயிர்ப்பலியாகிய உறவுகளின் 18ம் ஆண்டு நினைவேந்தலை நினைவுகூறும் முகமாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமாகிய கி.துரைராசசிங்கம் தன்னுடைய இல்லத்தில் மிக உணர்வுபூர்வமாக ஈகைச் சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலித்தார்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இணையவழி

அழிப்பு நினைவேந்தலை மேற்கொண்டவாறு சூம் (ZOO-M) இணைய செயலி ஊடாக இணைந்து கூட்டுப் பிரக்ஞையை வெளிப்படுத்தும் இந் நிகழ்வு

இரண்டு மணி நேரங்களுக்கும் அதிகமாக இடம்பெற்றிருந்தது. இந்த நினைவேந்தல் நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டிருந்தனர்.

முற்பகல் 10.30 மணிக்கு அனைவரும் இணைந்து தமிழ் மக்களின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிடம் அகவணக்கம் செலுத்தப்பட்டது. முற்பகல் 10.32 மணிக்கு அனைவரும் தங்கள் வீடுகளில் இருந்தவாறு சமநேரத்தில் கூட்டாக சுடரேற்றி வணக்கம் செலுத்தும் நிகழ்வு ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன. உரைகளைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனவழிப்பு யுத்த காலத்தில் பட்டினிசாவுக்கு தள்ளப்பட்டிருந்த மக்கள் தமது உயிர்களை காத்துக் கொள்வதற்காக அரிசிக் குறுணலை நீரில் அவித்து கஞ்சியாக உண்டு உயிரைக் காத்துக் கொண்ட அனுபவத்தை மீள நினைவு படுத்தும் முகமாக அனைவரும் கஞ்சியை பரிமாறிக் கொண்டார்கள்.

இணையவழி நிகழ்வில் இனவழிப்பினை நினைவு கூரும் வகையிலும், இனவழிப்புக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை வலியுறுத்தி அனைத்து தமிழ் சிவில் மற்றும் அரசியல் தரப்புக்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் உரைகளும் இடம்பெற்றிருந்தன.




## கணபதி அறக்கட்டளை மற்றும் GSHL இணைந்து வழங்கும் உதவித் திட்டம்

(வடமராட்சி நிருபர்)

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது .அந்த விடுதிக்கு அவசர தேவையாக குளிர்சாதன பெட்டி ஒன்றை பெற்றுத்தருமாறு மதிப்புக்குரிய வைத்திய அத்தியட்சகர் டாக்டர் திரு வே.கமலநாதன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கணபதி அறக்கட்டளை அமைப்பின் நிர்வாகி திரு கணபதிப்பிள்ளை கண்ணன் சுவிஸ் அவர்களின் நிதிப்பங்களிப்பில் ரூபா 55000 பெருமதியான குளிர்சாதனப்பெட்டி அரை மணி நேரத்திற்குள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது..

கொரோனாவை முற்றாக ஒழிப்பதற்கு அமைப்பினர் ஆகிய நாங்கள் எந்த நேரத்திலும் உதவிக்கரம் நீட்ட தயாராக உள்ளோம் என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றோம்

## பல்கலைகழ அனுமதி

திகதியை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி மே 21 முதல் ஜூன் 11 வரை குறித்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## மட்டக்களப்பில் 5 கிராம சேவகர் பிரிவுகள்

தேசிய கொவிட் 19 தடுப்புச் செயலணிக்கு பரிந்துரை செய்துள்ளதாக மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் தெரிவித்தார். இதன்படி பாலமீன்மடு,பூநொச்சிமுனை, கல்லடி வேலூர், சின்ன ஊறணி மற்றும் திருச்செந்தூர் ஆகிய 5 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளே இவ்வாறு முடக்கப்படடுள்ளன.

அதிக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்தே இப்பகுதிகள் தினமைப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட பிராநதிய சுகாதார சேவைள் பணிப்பாளர் டாக்டர் என்.மயூரன் தெரிவித்தார்.

## மரப்பாலம் விபத்தில் குடும்பஸ்தர் பலி

இடம்பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர். ஒரு குழந்தையின் தந்தையான பீ. விஜிதரன் என்பவரே பலியானவரென அடையாளங் காணப்பட்டுள்ளது.

கித்துள் பகுதியிலுள்ள தனது தாயின் வீட்டிலிருந்து மரப்பாலம் பிரதேசத்திலுள்ள தனது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது எருமை மாடு வீதியை குறுக்கிட்ட வேளை மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல்மாட்டுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் மாடு அவ்விடத்திலேயே இறந்துள்ளது.இவரது சடலம் செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கரடியனாறு பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## துறைமுக நகரத்திட்டம் குறித்த சட்டமூலம் தமிழ், முஸ்லிம் மக்களிடம் சாணக்கியன்

உறுப்பினர்களிடம் நீங்கள் வலியுறுத்த வேண்டும் என தமிழ், முஸ்லிம் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'தற்போது நாட்டில் துறைமுக நகரம் தொடர்பான ஒரு புதிய சட்டம் அமுலாகப்போகும் இந்த நேரத்தில், வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் விசேடமாக தமிழ் முஸ்லிம் தரப்பினர் அதிகளவில் பாதிக்கப்படக்கூடிய சூழலை இந்த துறைமுக நகரம் ஏற்படுத்தப்போகின்றது.

விசேடமாக கொழும்பில் மொத்த சில்லறை விற்பனையில் ஈடுபடும் வியாபார நிலையில் முழுமையாக ஒரு பத்து வருடக் காலப்பகுதிக்குள் இல்லாமல் போகக்கூடிய ஒரு அபாய நிலை காணப்படுகின்றது.

சீனாவினைச் சேர்ந்தவர்கள் நேரடியாக துறைமுக நகரத்தில் வந்து, அவர்களுடைய நிறுவனம் ஒன்றினை உருவாக்கினால், சீனாவில் இருந்துதான் இன்று பொருட்களை இறக்குமதி செய்து நாங்கள் இங்கு ஒரு 10 வீதத்தினை மேலதிகமாக வைத்து ஒரு இலாபத்தினை அடைந்து தமிழ், முஸ்லிம் தரப்புகள் விற்பனை செய்து வருகின்றோம்.

சிங்கள தரப்பிலும் தான் ஆனாலும் கூடியளவில் மொத்த சில்லறை விற்பனையில் அதிகம் ஈடுபடுவது தமிழ், முஸ்லிம் தரப்பினர்தான். இந்தநிலையில் 10 – 15 வீதத்தினை வைப்பதற்கு ஏன் சீனர்கள் விட வேண்டும். அவர்கள் இங்கு வந்தால் நேரடியாக இங்கே தங்களுடைய பொருட்களை விற்பனை செய்யக்கூடிய சூழல் அமையலாம். அந்த நேரத்தில் பெற்றாவில் தொழில் செய்யும் அனைவருக்கும் தொழில் இல்லாத அபாய நிலை உருவாகலாம்.

அதே நேரத்தில் பெந்தோட்ட, பேருவளை உள்ளிட்ட பகுதிகளில் இரத்தினக் கல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் அபாய நிலை உருவாகலாம். சீனத் தொழிலதிபர்களை உருவாக்க அவர்கள் முயற்சிக்கலாம்.

அந்த வகையில் தமிழ், முஸ்லிம் மக்கள் நீங்கள் எந்த தரப்பினருக்கு வாக்களித்து உருவாக்கினீர்களோ, அவர்களிடம் கேளுங்கள் இப்படி ஒரு நிலைமை உள்ளதா? இது உண்மையா எனக் கேளுங்கள். அதற்கு பதிலளிப்பதற்கு ஒரு கால அவகாசமாவது கேளுங்கள். நாளைய தினம் இந்த துறைமுக நகரத்திட்டம் குறித்த சட்டமூலத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு நீங்கள் அவர்களை கோர வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் மருதநகர் கிராமம் முடக்கம்

கே.தனபாலசுந்தரம் தெரிவித்தார்.

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மருதநகர் கிராமம் தனிமைப்படுத்தப்படுதல் தொடர்பில் வாழைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அவசர கலந்துரையாடல் புதன்கிழமை இடம்பெற்றது.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ், வாழைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித், உதவி பிரதேச செயலாளர் திருமதி.நிருபா பிருந்தன், செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கங்காதரன், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ், கல்மடு கிராம அதிகாரி கிராம அதிகாரி ஜெ.கிருசாந்த், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன, இராணுவ உயர் அதிகாரி, செயலக உத்தியோகத்தர்கள், கல்குடா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் கல்மடு கிராம அதிகாரி பிரிவிலுள்ள மருதநகர் கிராமத்தில் சுகாதார நடைமுறைகளை மீறி மரண வீட்டில் கலந்து கொண்ட நாற்பத்தியொரு நபர்களுக்கு எடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் இருபத்தி நான்கு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் மரண வீட்டிற்கு பலர் சென்று வந்த நிலையில் மருதநகர் கிராமத்திலுள்ள மக்களின் பாதுகாப்பு கருதி இன்று புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் குறித்த கிராமத்தில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரை கிராமத்தினை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டதுடன், பொலிஸ் மற்றும் பிரதேச சபையினரால் மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்குமாறும் பணிப்புரை வழங்கப்பட்டது.

அத்தோடு கல்மடு கிராம அதிகாரி பிரிவிலுள்ள மருதநகர் கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் கிராமத்தினை சுற்றி பாதுகாப்பு வழங்கும் நிலையில் குறித்த இடங்கள் பார்வையிடப்பட்டு, வீதிகள் சில மறிப்பு போடப்பட்டுள்ளது இக்கிராமத்தில் 588 குடும்பத்தை சேர்ந்த 1917 நபர்கள் வசித்து வருகின்றனர்.

இதில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ், வாழைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித், செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கங்காதரன், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ், இராணுவ உயர் அதிகாரி, கல்குடா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், கல்மடு கிராம அதிகாரி ஜெ.கிருசாந்த் ஆகியோர் இடங்களை பார்வையிட்டு நிலைமைகள் தொடர்பில் கண்காணித்தனர்.




## கொவிட் தொற்றாளர்களுக்கான இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் மன்னாரில்

ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் மன்னார் மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டால் இவர்கள் வெளிமாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த இடைத்தங்கள் முகாமுக்கே அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்பொழுது மன்னாரில் கொவிட் தொற்றாளர்களுக்கான இடைத்தங்கள் முகாம் திறந்துவைக்கப்பட்டு நோயாளர்களை பராமரிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ் இடைத்தங்கள் பராமரிக்கும் நிலையம் தொடர்பாக மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவுக்கான வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் அரசாங்க அதிபரால் பொறுப்பேற்கப்பட்டு இராணுவத்தின் 54 வது படையணியால் மறுசீரமைக்கப்பட்டு சுகாதார திணைக்களத்தால் கையேற்றப்பட்ட கொவிட் தொற்றாளர்களுக்கான இடைத்தங்கள் பராமரிப்பு நிலையம் இன்று புதன்கிழமை தாராபுரம் துருக்கி சிட்டியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இவ் நிலையமானது தனிப்பட்ட பெண்களுக்கான பராமரிப்பு நிலையமாக இது இன்று தொடக்கம் செயல்பட தொடங்கின்றது. இவ் நிலையத்தில் தற்பொழுது நூறு படுக்கைகள் மட்டுமே இங்கு காணப்படுகின்றது.

அதனால் நூறு நோயாளிகளை மட்டுமே இவ் இடைக்கால தங்கல் முகாமில் சகல வசதிகளுடன் பராமரிக்கக்கூடியதாக இருக்கின்றது என தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவுக்கான வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் இவ்வாறு தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் தீவிரமடையும் கொரோனா; ஒரே நாளில் 91 தொற்றாளர்கள்

தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மட்டக்களப்பு சுகாதாரப்பிரிவிலேயே ஆகக்கூடுதலாக 31 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 சுகாதாரப்பிரிவுகளும் சிவப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் தேவையற்ற விடயங்களுக்காக வீட்டைவிட்டு வெளியேறவேண்டாம் என பிராந்திய பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு சிறைச்சாலையில் தொற்றுக்குள்ளான கைதிகள் அனைவரும் மேல் மாகாணத்தில் ஹோமாகம பகுதியில் உள்ள சிறைக்கைதிகளை தனிமைப்படுத்தும் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

## கிழக்கு மாகாணத்தில் 3 ஆவது அலையில் 64 பேர் மரணம்; 6,612 பேருக்கு தொற்று

வீட்டில் இருப்பவர்களுக்கு எவ்வித நோய் அறிகுறிகளும் தென்படாத விடத்திலும் திடீர் கொரோனா மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் 3வது அலையில் கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் 64 பேர் மரணமடைந்துள்ளதோடு, மொத்தம் 86 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார அதிகாரிகளாலும் பொலிஸாராலும் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை சிலர் உதாசீனம் செய்து வருவதால், கிழக்கு மாகாணத்தில் கொரோனாவின் தாக்கம் மிக வேகமாக பரவி வருகின்றது. கடந்த 24 மணி நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் 121 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 2,248 பேரும், மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 1,564 பேரும், கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 1,574 பேரும், அம்பாறை சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 1,226 பேருமாக கிழக்கு மாகாணத்தில் 6,612 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவதானத்துக்குரிய வலயங்களாக மட்டக்களப்பு, தெஹியத்தக்கண்டி, திருகோணமலை, கிண்ணியா மற்றும் மூதூர் ஆகிய 05 வைத்தியதிகாரி பிரிவுகள் இவ்வாரம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழும் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.




SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# விலங்குகளை அச்சுறுத்தும் போலி கரடிகுட்டி

(பாறுக் ஷிஹான்)



விலங்குகளின் அச்சுறுத்தல்களில் இருந்து விவசாயி ஒருவர் தனது வேளாண்மையை பாதுகாப்பதற்காக டெடிபெயார் (போலி கரடி ) என்ற பொம்மையை வெருட்டியாக உபயோகப்படுத்தியுள்ளார்.

வேளாண்மை பயிர்செய்கை தற்போது பல்வேறு பிரதேசங்களிலும் பச்சை பசேல் என காட்சி தருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிட்டங்கி ஆற்றை அண்டிய பகுதியிலும் சிறுபோக வேளாண்மை பயிர்செய்கை ஆரம்பமாகியுள்ளது.

இவ்வாறு பயிரிடப்பட்டுள்ள வேளாண்மையை விலங்குகளின் அச்சுறுத்தல்களில் இருந்து விவசாயி ஒருவர் தனது வேளாண்மையை பாதுகாப்பதற்காக டெடிபெயார் என்ற பொம்மை ஒன்றினை காட்சி படுத்தியுள்ளார்.

வழமையாக வெருட்டி என்ற பொருளை நிர்மாணித்தே விலங்குகளின் நடமாட்டத்தை விவசாயிகள் கட்டுப்படுத்தி வந்தனர்.

குறித்த வெருட்டி பாணை முட்டி பழைய ஆடை அணிகலன்கள் கொண்டு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாந்தை பிரதேச சபை மீண்டும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வசமானது

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் காலமானதைத் தொடர்ந்து நடைபெற்ற புதிய தவிசாளர் தெரிவிக்கான வாக்களிப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி மூன்று பெரும்பான்மை வாக்குகளால் மீண்டும் தன்வசம் தலைமைத்துவத்தை கைப்பற்றியுள்ளது.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த முன்னாள் தவிசாளர் ஆசீர்வாதம் சந்தியோகு அன்மையில் காலமானதைத் தொடர்ந்து நேற்று புதன்கிழமை புதிய தவிசாளருக்கான தெரிவு மாந்தை மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேசசபையின் உறுப்பினர்களாக 25 பேர் இருக்கின்றபோதும் இதில் ஒருவர் மரணித்தமையால் 24 உறுப்பினர்கள் மத்தியிலேயே புதிய தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது.

இவ் தவிசாளர் போட்டிக்காக இரணை இலுப்பைக்குளத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இராமநாதன் வவுனியன் ஆதி அருணாசலமும், தமிழர் விடுதலைக் கூட்டனியைச் சார்ந்த விக்கினராசா கயிலைநாதனும் போட்டியிட்டனர்.

பகிரங்க முறையிலேயே வாக்கெ:டுப்பு நடைபெறுவதற்கு உறுப்பினர்களால் சம்மதம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினருக்கு ஆதரவாக 12 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டனிக் கட்சியின் உறுப்பினருக்கு சாதகமாக இலங்கை தமிழரசு கட்சி 5 உறுப்பினர்களும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவரும், தமிழர் விடுதலைக் கூட்டனி கட்சியைச்சார்ந்த 02 உறுப்பினர்களும், ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒருவரும் மொத்தம் 09 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

இவ் வாக்கெடுப்பு நிகழ்வின் போது ஸ்ரீ லங்கா முஸ்லீம் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் நடுநிலை வகித்ததுடன் சுயேச்சைக் குழுவைச் சார்ந்த ஒருவரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த ஒருவரும் மொத்தம் இருவர் இவ் வாக்கெடுப்பு நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

இதன் அடிப்படையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இராமநாதன் வவுனியன் ஆதி அருணாசலம் மூன்று அதிகபடியான வாக்குகளால் மாந்தை மேற்கு தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி மாந்தை மேற்கு பிரதேச சபையை மீண்டும் தன்வசம் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு மற்றுமொருவர் படுகாயம்

(ரக்ஸனா)



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் புதுக்குடியிருப்பில் செவ்வாய்கிழமை மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளர்.

மட்டக்களப்பில் இருந்து கல்முனைப் பகுதி நோக்கிச் சென்று கொண்டிருந்த காரும், கல்முனைப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன் காரில் பயணம் செய்த ஒருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பொதுமக்கள், பொலிசாரின் உதவியுடன் படுகாயமடைந்தவரையும், சடலத்தையும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த விபத்தில் புதுக்குடியிருப்பைச் சேர் ராஜேஸ்வரன் ரஞ்சித்(55-வயது) என்பவர் உயிரிழந்ததுடன் அவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளையும் காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# டயகம வைத்தியசாலையின் நடவடிக்கைகள் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தம்

(க.கிஷாந்தன்)



நுவரெலியா டயகம வைத்தியசாலையின் உதவி வைத்தியருக்கு, கொரோனா வைரஸ் தொற்று நேற்று புதன்கிழமை உறுதிபடுத்தப்பட்டதையடுத்து, வைத்தியசாலையில் நடவடிக்கைகள் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, லிந்துலை பொது சுகாதார வைத்திய அதிகாரி ஆர்.ஜெயராஜன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா டயகம வைத்தியசாலையின் உதவி வைத்தியருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டதையடுத்து, வைத்தியசாலையில் நடவடிக்கைகள் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, லிந்துலை பொதுசுகாதார வைத்திய அதிகாரி ஆர்.ஜெயராஜன் தெரிவித்துள்ளார்.


வைத்தியருடன் தொடர்பைப் பேணிய 18 உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பிரதேச மக்களை வைத்திய சிகிச்சைக்காக அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலைக்குச் செல்லுமாறு பொதுசுகாதார வைத்திய அதிகாரி ஆர்.ஜெயராஜன் குறிப்பிட்டுள்ளார்.





ஹொரவ்பொத்தான பிரதேச சபை மண்டபத்தை 100 கட்டிலில்கள் கொண்ட தற்காலிக கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை பார்வையிடுவதற்காக வடமத்திய மாகாண ஆளுனர் மஹிபால ஹெரத் உள்ளிட்ட குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நேரில் வந்து பார்வையிட்டனர்.

படம் - முஹம்மட் ஹாசில்







# திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



(பொன்ஆனந்தம்)

இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்டத்திலும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் மட்டு, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம் பிள்ளை மற்றும் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செய்தனர்.

இதனை திருகோணமலை மாவட்ட சிவில் அமைப்புகளும், ஏனைய அமைப்புகளும், திருகோணமலை வாழ் மக்களும் இணைந்து உணர்வுகளை வெளிப்படுத்தி இருந்தனர்.

இந்நிகழ்வுகளில் முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தின் போது மக்களுக்கு உணவாகப்பகிரப்பட்ட உப்பில்லாக் கஞ்சியினை நினைவு கோரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி இருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு – செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவம்

(ரக்ஸனா)



கிழக்கிலங்கையின் தனிச்சிறப்பு பெற்ற ஆலயமான மட்டக்களப்பு - செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் சடங்கு உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி வழமைபோல் சடங்குகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெற்று, எதிர்வரும் திங்கட்கிழமை பின்னிரவு திருக்குளிர்த்தியுடன் இன்தே நிறைவு பெறவுள்ளதாக மேற்படி ஆலய நிருவாகம் தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டில் தற்போது கொரோணாத் தொற்று நிலைமை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு செல்லும் நிலையில் மக்களின் பாதுகாப்புக் கருதி இச்சமயம் சடங்கை மாத்திரம் சம்பிரதாய முறைப்படி நடாத்த கண்ணகை அம்மன் திருவருள் கூடியுள்ளது.

**சடங்குகால கிரியை நிகழ்வுகள்**

வெள்ளிக்கிழமை (21.05.2021) முன் இரவு கதவு திறத்தல் கிரான்குளம் கிராம மக்கள், சனிக்கிழமை (22.05.2021) பகற் சடங்கு குருக்கள்மடம் கிராம மக்கள், சனிக்கிழமை (22.05.2021) இரவுச்சடங்கு மாங்காடு கிராம மக்கள், ஞாயிற்றுக்கிழமை (23.05.2021) பகற் சடங்கு தேத்தாத்தீவு கிராம மக்கள், ஞாயிற்றுக்கிழமை (23.05.2021) இரவுச் சடங்கு செட்டிபாளையம் கிராம மக்கள் திங்கட்கிழமை (24.05.2021) பகற் சடங்கு களுதாவளை கிராம மக்கள் , திங்கட்கிழமை (24.05.2021) பின்னிரவு திருக்குளிர்த்திச் சடங்கு களுதாவளை கிராம மக்கள் ஆகிய ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

இதன் படி கொவிட் - 19 தடுப்பு பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி இச்சடங்கை நடாத்துவது தொடர்பில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் பக்தர்களின் கவனத்திற்கு ஆலய நிருவாகம் மேலும் அறிவித்துள்ளது.

அம்மன் சடங்கு காலப்பகுதியில் பொதுமக்கள் எவரும் எக்காரணம் கொண்டும் ஆலய வளாகத்தினுள் வர அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பக்தர்களின் நன்மை கருதி பகல் இரவுச்சடங்குகள் சமூக வலைத்தளங்கள் மூலம் நேரடி ஒலி, ஒளிபரப்பு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே பக்தர்கள் உரிய ஆசாரங்களைப் பேணி வீட்டிலிருந்தவாறே வழிபாடுகளை மேற்கொள்வதுடன் இக்கொடிய கொரோனா நோயிலிருந்து அனைவரும் விடுபட பிரார்த்திக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றனர்.

இம்முறை ஆலயக் கதவு திறந்த பின்னர் எவ்விதமான நேர்கடன்களோ, பூஜைப் பொருட்களோ ஆலயத்தினால் பெற்றுக்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுன.

இந்த நாட்களில் அங்கப் பிரதட்சனை, கற்பூர விளக்கு எடுத்தல், போன்ற எந்தவித செயற்பாடுகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளன.

ஆலய சடங்கு உற்சவ காலப்பகுதியில் ஆலய வளாகத்தினுள் அல்லது அதன் சூழலில் கடைகள் வைப்பது, ஒன்று கூடுவது, யாசகம் பெறுதல், அன்னதானம் வழங்குதல் போன்றன முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன.

மேலும் இந் நிபந்தனைகளை மீறுவோர் மீது தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய் தொடர்பான சட்டவிதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம், என்பதுடன் அன்னையின் சடங்கு நிறுத்தப்பட்டு ஆலயம் பூட்டப்படுவதற்கான காரணமாகவும் அமையலாம்.

எனவே இவ்வருட அம்மன் சடங்கினை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொலிஸ் பாதுகாப்பு பிரிவினரின் மேற்பார்வையோடு நடத்த பொது மக்களின் பூரண ஒத்துளைப்புக்களை வழங்குமாறு இறையன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கமைய செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# பதுக்கி வைத்திருந்த பெருமளவு மதுபான போதத்தல்களுடன் மட்டக்களப்பில் மூவர் கைது



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

எதிர்வரும் 21 ம் திகதி அமுலாகும் பயணக்கட்டுப்பாட்டு காலப்பகுதியில் மதுபான சாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் கறுப்பு சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கென மூன்று வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு மதுபான போத்தல்களை மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவினர் கைப்பற்றியுள்ளதாக அப்பரிவின் பொறுப்பதிகாரி பி.எஸ்.டி.பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று மாலை ஏழு மணியளவில் குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.டி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மாமாங்கம் கூழாவடி ஊறணி ஆகிய இடங்களில் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது 307 போத்தல் 180 மில்லிலீற்றர் கொள்ளவுள்ள சாராய போத்தல்களும் 750 மில்லிலீற்றர் கொள்ளளவுள்ள 8 சாராய போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளன.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich Tel : 044 2410241
sikaramgmbh@gmail.com / www.sikaram.com Fax : 044 2410245

# முப்படையினரின் பங்கேற்றலுடன் இடம்பெற்ற வற்றாப்பளை அம்மன் சடங்கு!







(காரைதீவு நிருபர்)

வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கலுக்கு உப்பு நீரில் விளக்கேற்றுவதற்கு தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு கோவிட் தொற்று காரணமாக பலத்த இராணுவ பொலிஸ் பிரசன்னத்துடன் கட்டுப்பாடுகளுடன் இடம்பெறுள்ளது.

வருடந்தோறும் முள்ளியவளை காட்டா விநாயகர் கோவிலிலிருந்து நடையாக சிலவத்தை தீர்த்த கரைக்கு சென்று கடலில் உப்புநீரில் விளக்கேற்றுவதற்காக தீர்த்தம் எடுப்பது வழமை .

ஆனால் இவ்வருடம் அவ்வாறு அல்லாமல் மட்டுபடுத்தபட்டவர்கள் மாத்திரம் தீர்த்தம் எடுப்பதற்காக அனுமதிக்கப்பட்டு உளவு இயந்திரத்தில் சென்று தீர்த்தம் எடுத்து வந்தனர். இந்த தீர்த்தம் எடுக்கும் நிகழ்வில் நூற்றுக்கணக்கான இராணுவம் பொலிஸ் பிரசன்னமாகியிருந்தனர்.

வீதிகள் தோறும் மக்கள் கும்பங்கள் வைத்து தேங்காய் உடைக்க அனுமதி வழங்கவில்லை. இன்றிலிருந்து எதிர் வரும் 24.05 திங்கள் வரை முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் உப்புநீரில் விளக்கெரியும் அதிசயம் இடம்பெற்று 24 ஆம் திகதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி விசாக பொங்கல் இடம்பெறவுள்ளது.

கோவிட் பரவல் காரணமாக இம்முறை வைகாசி விசாக பொங்கலுக்கு மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதோடு சடங்குகள் பூசைகள் மட்டும் இடம்பெறவுள்ளது.

# அன்புவழிபுரம் சிவில் சமூகத்தின் கொவிட் 19 தன்னார்வ உதவி

(பொன்ஆனந்தம்)



திருகோணமலை மாவட்ட பொது வைத்திய சாலைக்கு ஒருதொகுதி மருத்துவ உதவி பொருட்கள் அன்புவழிபுரம் சிவில் சமூக அமைப்பு மூலம் வழங்கப்பட்டன.

நண்பர்கள் நலன்விரும்பிகளின் பங்களிப்புடன் இந்த உவந்தளிப்பு திங்களன்று கையழிக்கப்பட்டன. நன்கொடை மூலம் வைத்திய சாலை கொவிட்-19 விடுதிக்கு தேவையான ரூ. 274785.00 பெறுமதியான மருந்து அல்லாத பொருட்கள் வழங்கப்பட்டது.

அன்புவழிபுரம் சிவில் அமைப்பு இணைப்பாளர் டாக்டர் ரோகான் தலமையிலான குழு நிருவாகத்திடம் இவற்றை கையழித்தது. கந்தளாய் வைத்திய சாலைக்கு முதற்கட்டமாக இவ்வாறு ஒரு தொகுதி பொருட்கள் கையழிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பணியில் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது சிவில் சமூகத்தின் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# சர்வதே மனித உரிமைச் சட்டங்களை மதித்த நடக்கும் அழுத்தத்தை இஸ்ரேலின் நட்பு நாடுகள் உருவாக்க வேண்டும்

## விரிவுரையாளர் அஷ்யெய்க் அன்ஸார் பழீல் மௌலானா



(பி.எம்.எம்.ஏ.காதர்)

சர்வதே மனித உரிமைச் சட்டங்களை மதித்த நடக்கும் அழுத்தத்தை இஸ்ரேலின் நட்பு நாடுகள் உருவாக்க வேண்டும் என மருதமுனை பழீல் மௌலானா பவுன்டேசன் தவிசாளரும், விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நீண்ட பல தசாப்தங்களாக நீறு பூத்த நெருப்பாக எரிந்த கொண்டிருக்கும் பலஸ்தீன் மக்களின் நிலவுரிமை, வாழ்வுரிமை, வழிபாட்டுரிமை, இஸ்ரேலினால் மறுக்கப்பட்டு வருகின்ற அசாதாரண சூழ்நிலைகளின் உச்சக்கட்டமாக மரமேறி விழுந்தவனை மாடேறி மித்த சோகக் கதையாக இன்றைய பலஸ்தீன் அல்-அக்ஷா நெருக்கடி மாறியுள்ளது. முழு அரபு உலகமும் மெல்ல மெல்ல இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை வளர்த்துக் கொண்டுவரும் சூழ்நிலையில் வெண்ணை திரண்ட வரும் நேரம் தாழி உடைத்த கதையாக இன்றைய பலஸ்தீன் காஸாப் போராட்டம் பதிய பரிமானம் எடுத்திருப்பதை இஸ்ரேலின் அண்மைய மிலேச்சத்தனமான வான் தாக்குதல் உணர்த்துகின்றது.

1947ஆம் ஆண்டு தொடங்கிய பலஸ்தீனப் பூமியின் ஆக்கிரமிப்பு பல்வேறு போராட்ட வடிவங்களைப் பெற்று 1967 ஆம் ஆண்டு புனித மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்படும் அளவுக்கு உச்சத்தை அடைந்து மேற்குக் கரை கோலான் குன்று என்ற பலஸ்தீனத்தின் நிலவுரிமையை அபகரித்து இஸ்ரேலுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் பல்வெறு தீர்மானங்களும் கேம்ப்டேவிட், நஸ்லோ போன்ற பிரசித்த நட்புத் தளங்கள் சர்வதேச கண்காணிப்புடன் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை வெற்றுக் காகிதங்களாகவும், செவிடன் காதில் ஊதிய சங்காகவும் மாறி அர்த்த மற்றுப் போய்விட்டன.

இந்தப் பின்னணியில் 2017ஆம் ஆண்டு துருக்கி, இஸ்தான் பூலில் அதிபர் எந்துகான் தலைமையில் 57 முஸ்லிம் நாடுகளின் தலைவர்களின் மேற்பார்வையில் கூடி எடுத்த 23 அம்சங்கள் அடங்கிய தீர்மானங்களும், உலக இஸ்லாமிய மாநாட்டு அமைப்பால் ஒரு கூட்டுப் பிரகடனமாக முன் மொழியப்பட்டு அதை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ரம்ப் தனது ரத்து அதிகாரத்தைப் பாவித்து ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலைநகராக மாற்றிய சதி முயற்ச்சியில் முழு மூச்சாக ஈடுபட்ட அமேரிக்கா வரலாற்றில் கறை படிந்த அத்தியாயத்தை ஏற்படுத்தி விட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரகடனம் சர்வதேச சட்டங்களையும் ஜெனிவா உடன் படிக்கைகளையும் மீறுவதாக இருப்பதோடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் இலக்கம் 478(1980) மற்றும் 2334(2016) தீர்மானங்களை அமேரிக்காவின் குறித்த பிரகடனம் மீறியுள்ளதாக உலக இஸ்லாமிய மாநாட்டு அமைப்பின் உத்தியோகபூர்வ அறிக்கை வலியுறுத்தியுள்ளது. இதே வேளை 1980ஆம் ஆண்டின் யு.என்.எஸ்.சி.ஆர் 478 ஆம் தீர்மானத்தைத் தொடர்ந்தும் முழுமையாக அமுல்படுத்தி சர்வதேச மனித உரிமைப் பேரவையின் செயற்பாட்டு ஆதரவுக்கு வலுச் சேர்ப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.


ஜெரூசலத்திலுள்ள ஷைக்ஜாரா மாவட்டத்தில் யூதர்கள் உரிமை கொண்டாடும் நிலத்தில் வசித்து வரும் பலஸ்தீனக் குடும்பங்களை வெளியேற்ற இஸ்ரேல் அரசு நடவடிக்கை எடுத்து வந்தது. இதன் தொடர்ச்சியாக ஜெரூசலத்திலுள்ள அல்-அக்ஸா பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதியில் சென்ற வாரம் தொடக்கம் இஸ்ரேல் பொலிசாருக்கும் பலஸ்தீனருக்குமிடையே மோதல் நடைபெற்று வருகின்றது. அதே சமயம் கிழக்கு ஜெருசலமைக் கைப்பற்றியதைக் கொண்டாடும் விதமாக மே மாதம் 9ஆம் திகதி 10ஆம் திகதி வரை ஜெரூசல் தினம் என்ற பெயரில் இஸ்ரேல் கொண்டாடுவதாக இருந்தது இதனையடுத்து இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீயர்களுக்குமிடையில் மோதல் வெடித்தது இதன் தொடர்ச்சியாக பலஸ்தீனத்தின் காஸா முனையை தன்னாட்சி உரிமை பெற்று ஆட்சி செய்து வரும் ஹமாஸ் போராளிகள் அமைப்பு இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தியது.

இதனையடுத்து ஹமாஸ் அமைப்பு போராளிக் குழுவை திவிரவாத இயக்கம் எனக் கூறிவரும் இஸ்ரேல் அந்த அமைப்பின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் வான் வழித்தாக்குதலை நடாத்தியதால் அதிகமான சிறுவர்கள் உட்பட இதுவரை 200க்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதுடன் கிழக்கு ஜெரூசலமில் வாழும் பலஸ்தீன அகதிகளில் அதிகமானோர் உயர்ந்த கட்டங்களின் இடிபாடுகளுக்குள் சிக்கி மரணித்திருக்லாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

எனவே ஐக்கிய நாடுகள் சபை இதனை மேலும் பார்த்துக் கொண்டிருக்காமல் சர்வதேச மனித உரிமைப் பேரவையுடனும் உலக இஸ்லாமிய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடனும் இணைந்து ஆக்கபூர்வமான தற்காலிக போர் நிறுத்த உடன் படிக்கையொன்று கைச்சாத்திட முன்வரவேண்டும். பனிப்போர் தத்துவ சிந்தனையை கைவிட்டு மனித நேயத்துடனும், சகவாழ்வுடனும் இஸ்ரேல்-பலஸ்தீன்மக்கள்சர்வதேசநியமங்களுக்கு ஏற்ப கௌரவத்துடன் வாழ்வதற்கான சாத்தியமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

இதே வேளை பலஸ்தீன் ஆயுதக்குழுக்கள் தமது தீவிரவாத பிடிவாதப் போக்கைக் கைவிட்டு ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு தமக்கிடையிலான போட்டி மனப்பான்மையைக் கைவிட்டு இஸ்லாத்தின் பெயரால் ஒரணியில் திரண்டு ஒற்றுமைப்பட்டு பலஸ்தீன மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கான தீர்க்கதரிசனமான பரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு தயாராக முன்வரவேண்டும்.

# பணயத்தடைக் காலத்தில் உணவுப் பொருட்களை வெளியிலிருந்து கொள்வனவு செய்ய அனுமதி



(எஸ்.கார்த்திகேசு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்று பரவல் காரணமாக அரசியால் கொண்டுவரப்படும் பயணத்தடைக் காலத்தில் பொது மக்களுக்கான உணவுத் பொருட்களை தட்டுப்பாடு இன்றி நியாய விலையில் உணவுப் பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக திருக்கோவில் பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்களுடனான அவசர கலந்துரையாடல் ஒன்று திருக்கோவிலில்நேற்று இடம்பெற்று இருந்தன.

இவ் கலந்துரையாடலானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் புதன்கிழமை (19) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்று இருந்தன.

இவ் கூட்டத்தில் பிரதேசம் மாவட்டம் மற்றும் மாகாணங்களுக்குச் சென்று உணவுப் பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் அத்தியாவசியப் தேவைகளுக்காக பிரயாணம் செய்தல் போன்றவற்றுக்கான அனுமதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டதுடன் அனுமதிகளைப் முறையாகப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்ப படிவங்களும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தன.

இதேவேளை இவ் விண்ணப்பப் படிவங்களை கிராம சேவையாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள கூடியதாக இருப்பதுடன் இது தொடர்பான தெளிவுபடுத்தல்களும் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனினால் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.


இவ் கூட்டத்தில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா கிராம சேவையாளர்களுக்கான நிருவாக அதிகாரி திருமதி பரிமலாதேவி சில்வெஸ்டர் சிரேஸ்ட கிராம சேவை உத்தியோகத்தர் கண.இராஜரெத்தினம் மற்றும் திருக்கோவில் பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# மூன்றாம் உலகப்போருக்கான உயிரியல் ஆயுதத் தயாரிப்பாக கொரோனா வைரஸ்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன

(துறையூர் சஞ்சயன்)

அமெரிக்காவின் வெளிநாட்டுத் துறைகளுக்கான ஆய்வக அறிக்கையின்படி மூன்றாம் உலகப்போருக்கான உயிரியல் ஆயுதத் தயாரிப்பாக கொரோனா வைரஸ் தயாரிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் தெரிவித்தார்.



அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறுகையில்,

மூன்றாம் உலகப்போருக்கான உயிரியல் ஆயுதத் தயாரிப்பாக கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டுள்ளதாக

தகவல் அம்பலமாகியுள்ளது.

அந்த வகையில் சீனாவின் இராணுவத்துறை இதனைத் தயாரித்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட கொரோனா வைரஸ் சீன ஆய்வுகூடத்தில் இருந்து கசிந்துள்ளது. 2015 களில் இந்த வைரஸ் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா கூறுகிறது.

மூன்றாம் உலகப்போர் ஏற்படுகின்றபோது எதிரி நாடுகளை அழிப்பதற்கு இந்த வைரஸ் பயன்படுத்த இருந்தததாகக் கூறப்படுகிறது. கண்டுபிடிக்க முடியாதளவுக்கு இந்த இரகசியம் பேணப்பட்டாலும் அது வெளியே வைரஸ் கசிந்தது போல தகவலும் கசிந்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) இது செயற்கையானது அல்ல என ஏற்கனவே மறுத்துள்ளது. ஆனால் அமெரிக்காவின் ஆய்வுப்படி கொரோனா, சாள்ஸ் வைரசுகள் மூன்றாம் உலகப்போரைச் சந்திப்பதற்கான சீனாவின் உயிரியல் ஆயுதமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் முதலாவது வல்லரசாகவுள்ள அமெரிக்காவைப் போரில் முறியடிப்பதாயின் இப்படியான உயிரியல் ஆயுதங்கள் சீனாவுக்குத் தேவையாகவுள்ளது போலும். உலகத்தையே முடக்கியுள்ள உலக மக்களையே அழிக்கின்ற இவ்வாறான வைரசுகள் மிக மிக ஆபத்தானவை. மக்களாகிய எலிகளுக்கு மரண வல்லரசுகளான பூனைகளுக்கு விளையாட்டாகவுள்ளது. இது உண்மையாக இருந்தால் அறிவியலின் பாதகமான வளர்ச்சி உலக மக்களையே அழித்துவிடும்.

பசி பட்டினியால் பல மில்லியன் மக்கள் உலகில் உயிரை விட்டுக்கொண்டிருக்க, போதாக்குறைக்கு மேலும் பில்லியன் கணக்கான மக்களின் உயிரைக் குடிக்க உயிரியல் ஆயுதங்களும் தேவைதானா? என்பது மனித நேயர்களின் கருத்தாகவுள்ளது என்றார்.

# காரைதீவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு!




(சகா)

இறுதிக்கட்டப்பேரின்போது முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த தமிழ்உறவுகளை நினைவுகூர்ந்து திங்கள் மாலை தமிழர் பிரதேசங்களில் பரவலாக வீடுகளில் நினைவுச்சுடரேற்றிஅஞ்சலி நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

அந்தவகையில் அம்பாறை மாவட்டத்திலும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முக்கயஸ்தரும் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தனது வீட்டில் உயிர்நீத்த உறவுகள் நினைவாக புஸ்பாஞ்சலி செலுத்தி சுடரேற்றிஅஞ்சலி செலுத்தினர்.

கொவிட் 19 அசாதாரண சூழ்நிலைகாரணமாக அமைதியாக சுகாதாரமுறைப்படி இந்நிகழ்வு அவரது வீட்டில் நடைபெற்றது.

மேலும் சில தமிழ்ப்பற்றாளர்களும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வு இடம்பெற்றுமுடிந்த பிற்பாடு பொலிசார் வந்து விசாரணை செய்து சென்றிருந்தார்கள்.

கடந்த மாத சபை அமர்வில் உலகத்தமிழர்கள் அனைவரும் மே 18ஆம் திகதி 18மணி 18நிமிடம் 18விநாடியில் எமது உயிர்நீத்தஉறவுகளை நினைவுகூரவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

WWW.SUPEEDSAM.COM

# கல்முனைப் பிராந்தியத்தில் அடையாள அட்டை ஒழுங்கை மீறி பயணித்தவர்கள் மீது அதிரடி நடவடிக்கை



(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட கல்முனை பிரதான நகரம், பாண்டிருப்பு, பெரியநீலாவணை போன்ற பிரதேசங்களில் நேற்று (19) விசேட வீதி சோதனை நடவடிக்கைகள் அதிரடியாக முன்னெடுக்கப்பட்டன.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். குணசிங்கம் சுகுணன் தலைமையில் சுகாதார தரப்பினரும், இராணுவத்தினர் மற்றும் பொலிசார் ஒன்றிணைந்து இந்த திடீர் வீதிச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன்போது அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய அடையாள அட்டை ஒழுங்கை மீறி பயணித்தவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் பி.சி.ஆர், அன்டிஜென் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய அடையாள அட்டை இலக்கங்களின் இறுதி இலக்கம் ஒற்றை இலக்கத்தை கொண்டவர்கள் ஒற்றை நாட்களிலும் இரட்டை இலக்கங்களை கொண்டவர்கள் இரட்டை நாட்களிலும் அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் பயணிக்க முடியும் என அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

எனினும் பொதுமக்கள் அரசாங்கத்தின் இந்த அறிவித்தல்களை மீறி செயற்படுவதாக தமக்கு கிடைத்த தகவலுக்கு அமையவே இந்த அதிரடி சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி. சுகுணன் தெரிவித்தார்.

சுகாதார சட்ட விதிமுறைகளை மீறி வீதிகளில் முகக் கவசம் அணியாத மற்றும் சமூக இடைவெளிகளை சரியாக பின்பற்றாத, வீதிகளில் வீணாக சுற்றித் திரிந்தவர்கள் மீதும் பி.சி.ஆர், அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் சமூக இடைவெளி பேணாது கூட்டம் கூட்டமாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டட வர்த்தக நிலையங்களுக்கும் சுகாதார பரிசோதகர்கள் திடீர் விஜயம் மேற்கொண்டனர் இதன்போது வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டதோடு தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டால் குறித்த வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கண்டிப்பான உத்தரவும் வழங்கப்பட்டது.

இதன்போது ஒரு நபருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதுடன் குறித்த நபரை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

# சமுகசேவையாளர் முன்னாள் அதிபர் வே.கிருஸ்ணபிள்ளை காலமானார்!

(சகா)

காரைதீவைச்சேர்ந்த ஓய்வுநிலை அதிபர் வே.கிருஸ்ணபிள்ளை நேற்று(19) தனது 81ஆவது வயதில் காலமானார்.



இவர் கல்முனை கார்மேல் பற்றிமா தேசியகல்லூரியில் பிரதிஅதிபராக 3தசாப்தகாலத்திற்கும் மேலாக அர்ராப்பணிப்பான சேவையாற்றியவராவார்.

காரைதீவு ஓய்வூதியர் சங்கத்தலைவராக கண்ணகை அம்மனாலய நிருவாகசபை உறுப்பினராக விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்ற செயற்குழு உறுப்பினராக ப.நோ.கூ. இயக்குனர்சபை உறுப்பினராக பல்வேறு சமுகசேவை அமைப்புகளில் தனது பொதுச்சேவையை வழங்கியவர்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று(20)வியாழக்கிழமை காலை 9மணியளவில் காரைதீவு இந்துமயானத்தில் நடைபெறுமென குடும்பத்தினர் தெரிவித்தனர்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com